# நாட்டுப்புறத் தெய்வமும் மக்களின் சடங்குகளும்

**மயிலம் இளமுருகு (வெ. பாலமுருகன்)**
**தமிழாசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி**
**ஆரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.**

மக்கள் குடும்பத் தெய்வம், குலதெய்வம், ஊர் தெய்வம் என்று பல்வேறு வகையான தெய்வங்களை வழிபாடு செய்து வருகின்றனர். இவற்றில் தெய்வம், குலதெய்வ வழிபாடு, சடங்குகள், தோற்றம் போன்றன குறித்து அறிந்து கொள்வோம். பார்க்கப்போனால் அவரவர் வழிபாடு செய்யும் குலதெய்வம் என்பது பெரும்பாலும் ஆணாகவோ பெண்ணாகவோ உள்ளன. இவ்வழிபாட்டினை உற்றுநோக்கும்போது பின்வரும் கருத்து கவனிக்கத்தக்கது. சிறு தெய்வங்களில் மாரியம்மன் அய்யனார் போன்றவை பெரும்பாரம்பரிய மரபை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர். பெரும்பாலும் நாட்டுப்புற மக்கள் மாரியம்மன், கண்ணகி, அய்யனார் தெய்வத்தினை வழிபாடு செய்கின்றனர். பெண்ணைக் குலத் தெய்வமாக வழிபாடு செய்பவர்கள் முதல் சமூகமான தாய்வழிச் சமூகத்தினை மதித்துப் போற்றியவர்களாக இருந்திருக்கின்றனர்.

**பெண்தெய்வ வழிபாடு**

எனவேதான் இன்றும் இவர்கள் குலத் தெய்வமாகப் பெண் தெய்வத்தை வழிபாடு செய்கின்றனர். இவர்கள் பெண்களைப்பெரும்சக்திவாய்ந்தவர் என்று கருதுகின்றனர். அதன் காரணமாகவே பெண்ணுக்கு மரியாதை செலுத்தினர். அக்காலத்தில் தன் கணவன், குழந்தை போன்றவர்களைக் காப்பவளாகப் பெண்ணே இருந்தாள். எனவேதான் பெண்ணைத் தன் குலத்தெய்வமாக வழிபாடு செய்தனர். கொல்கத்தாவில் காளிதெய்வ வழிபாடு என்பது முக்கியத்துவம் பெற்ற வழிபாடாகும். அதைப்போலவே தமிழகத்திலும் கண்ணகி என்றும் மாரியம்மன் என்றும் வழிபாடு செய்து வருகின்றனர்.'மைக்கேல் ரோஸ்லின்ட்ன் மைல்ஸ்' என்பவர் 'உலக வரலாற்றில் பெண்கள்' என்னும் நூலில் பெண் தெய்வம், பெண்ணின் செயல்பாடு, சமூகத்தில் தன்நிலை என்று பல்வேறுபட்ட கோணத்தில் சொல்லிச் சென்றுள்ளதைக் கவனிக்க முடிகின்றது.

ஆண்களைக் குலத் தெய்வமாக வழிபாடு செய்பவர்கள் ஆண்வழிச் சமூகம், அதாவது இரண்டாவதான தந்தைவழிச் சமூகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் என்பது உறுதிப்படுகின்றது. ஆணாதிக்கத் தலைமையின் எச்சமாக இவ்வழிபாடு உள்ளது. உண்மையில் ஆண்கள்தான் வீரத்தில் சிறந்தவர்கள் என்றும் அதன் மூலமாக அய்யனார் போன்ற தெய்வ வழிபாடுகள் தோன்றியதை நாம் அவதானிக்கிறோம். வீரமாகப் போர் செய்து இறந்தவர்களைப்புதைக்கக் கல் எடுத்து வழிபாடு செய்தனர். இச்செய்தியினைத் தமிழில் மிகத்தொன்மை நூலான தொல்காப்பியம் வரையறை செய்துள்ளது.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபின் பெரும்படை
வாழ்த்தலென்று இருமூன்று மரபிற் கல்லொடு புணர"

தொல்காப்பியம், புறத்திணையியல்.இத்தகைய முறையைப் பின்பற்றுவது அக்கால மரபு என்பது குறிப்பிடத்தக்கது. குழந்தை இறந்தால் கூட அக்குழந்தையின் மார்பில் கத்தியால் கிழித்துப் புதைப்பது என்பதினை அக்கால மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இப்படியான தகவல்களைத் தமிழில் சங்க இலக்கியம் என்னும் பாடல்கள் விளக்குகின்றன. எனவே வீரயுக காலகட்டத்தில் இறந்தவர்களை மதித்து வழிபாடு செய்ததன் எச்சமே இன்று குலதெய்வ வழிபாடாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**முன்னோர் வழிபாடு**

இறந்தவர்களின் ஆற்றல் வாழ்கின்ற மக்களுக்கு நன்மை தருவதாகக் கருதி முன்னோர்களை வழிபாடு செய்தனர். இந்த வழிபாட்டில் பல்வேறு கூறுகள் அடங்கியுள்ளன. அதாவது இவ்வுலக வாழ்வு இம்மை, மறுமை கொண்டது என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் பல சிறப்புகளைக் கொண்டது என்றும் கருதுகின்றனர். ஒரு பிறவியில் செய்தது மறுபிறவியில் அமையக்காரணமாகிறது என்று நினைத்தனர். ஒரு பிறவியில் ஒருபெரும் ஆற்றல்பெற்ற அவர் இறந்தபின் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுவது போன்ற நம்பிக்கைகளை மக்கள் நம்பினர். அவை ஒன்றுடன் ஒன்று இறந்த மூதாதையர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செழுமைப்படுத்தும் என்ற நம்பிக்கையில் மூதாதையர்களை வழிபாடு செய்தனர், செய்கின்றனர்.

இறந்தோரின் ஆசி என்றென்றும் வாழ்வோருக்குக் கிடைக்க வேண்டும் என முன்னோர்களை வழிபாடு செய்கின்றனர். இறந்தோரின் விருப்பங்களையும் அவருக்குப் பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவரை வழிபடுதல் மூலம், தீய ஆற்றல்களிலிருந்து முன்னோர்கள் நம்மைக் காப்பார்கள் என்றும், அவர்கள் சினம் கொள்ளாமல் இருக்க அருள் குணத்துடன் ஆதரிப்பார் என்றும் நம்பி முன்னோருக்கு வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாட்டை மானுடவியலாளரான டைலர் என்பவர் மற்றும் சமுதாயவியலாளரான ஹெர்பர்ட் ஸ்பென்சர் போன்றோர் இவர்களை 'முதிர்ச்சியடையாத மனப்பக்குவம் உடையோரின் சமய நம்பிக்கை' என்று கூறினார்கள்.பழங்குடியினர் இறப்பையும் இறப்புக்குப் பின்னர் நிகழும் செயலையும் புரிந்துகொள்ளவியலா நிலையில் ஏற்பட்ட மயக்கத்தினால், இறந்தோரின் ஆவிகளை வழிபாடு செய்யத் தொடங்கினர். இப்படிப்பட்ட கருத்தாக்கங்களை டைலரிங் என்பவரும் விளக்குகின்றார்.

இறந்த மூதாதையர்களைப் பற்றிய எண்ணங்கள் உண்மையிலேயே பலவாறாக இருந்தன. குல அமைப்பும், கால்வழி அமைப்பும் மிகவும் வேரூன்றியுள்ள பழங்குடிச்சமுதாயங்களில் குலமூதாதையர் அல்லது கால்வழியினர் அனைவராலும் வணங்கப்படுகிறார். இவ்வகை சமயங்களில் ஒன்றுக்குமேற்பட்ட மூதாதையர்களும் வழிபாட்டுக்கு உரியர். ஏனெனில் சில பழங்குடியினர் வேறு யாருக்கும் இல்லாத வகையில் மிகப்பழைய காலத்து முன்னோர்கள் வாழ்ந்த மரபிலேயே வழிபாடு செய்கின்றனர். ஒரு மூதாதையர் காலத்துக்கு முன் தோன்றியது என்று இத்தகைய வழிபாடுகளுக்கு மதிப்பீடுகள்

வழங்குகின்றனர். மேற்கு ஆப்பிரிக்காவிலும் மலேசியாவிலும் இறந்தவர்களை நினைத்து வழிபாடு செய்யும் சடங்கு குறித்தான கருத்துகளைப் பக்தவத்சல பாரதி அவர்கள் 'பண்பாட்டு மானிடவியல்' என்ற நூலில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

நடைமுறை வாழ்வில் முன்னோர்களின் கருத்துகளை அடிக்கடி எண்ணுவதால் இவர்களிடம் முன்னோர் வழிபாடு இன்றும் நிலைத்துள்ளது. சீன மக்கள்முன்னோர் கூறிய வழிபாட்டை மிகப் பழைய காலத்திலிருந்தே மேற்கொண்டிருந்தனர். கிமு 1000 ஆண்டு காலத்திலேயே இவ்வழிபாட்டைக் கொண்டிருந்தனர் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சீனாவில் முன்னோர் வழிபாடு, சமூகத்தினர் அனைவருக்கும் பொதுவானதாக இல்லாமல் ஒவ்வொரு குடும்பத்தினரும் தனிப்பட்ட முறையில் வழிபாடு செய்யும் முறையாக இருந்தது. முன்னோரை வழிபடும் நாட்களில் அவர்கள் உருவாக்கிய அவரின் நினைவாகச் செதுக்கிய தூண்களிலும் படையலிட்டு வாசனைப் பொருட்களைச் செய்தும் வழிபாடு செய்தனர். கன்பூசியஸின் தோற்றத்தாலும் பொதுவுடைமைக் கொள்கையின் வளர்ச்சியாலும் முன்னோர் வழிபாடு மறையத் தொடங்கியுள்ளது. ஜப்பான் அமெரிக்கா மத்தியத் தரைக்கடல் பகுதி போன்ற இடங்களில் முன்னோர் வழிபாடு காணப்படுகிறது. பண்டைய எகிப்திலும் உரோமிலும் இறந்தோரை வழிபாட்டு கொள்ளும் முறை சிறப்பாக இருந்து வந்துள்ளது. இந்து சமய நம்பிக்கையிலும் இந்தியாவிலுள்ள பெரும்பாலான பழங்குடியினரின் சமய நம்பிக்கையிலும்முன்னோர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை நாம் அறிகிறோம்.

**நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு**

நாட்டுப்புறத் தெய்வங்களை மக்கள் வழிபாடு செய்கின்றனர். இதனைக் குடும்ப வழிபாடும் என்றும் குலதெய்வ வழிபாடு என்றும் ஊர் தெய்வ வழிபாடு என்றும் சொல்வர். வீட்டில் யாரேனும் துன்பமாக இருந்தாலோ நோய்வாய்ப்பட்டிருந்தாலோ வழிபாடு செய்தனர். குடும்பத் தெய்வத்திற்கு வழிபாடு செய்வதற்கும் ஒவ்வொரு பிரிவினரும் பல குழுக்களாகப் பிரிந்து வாழ்கின்றனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு குலதெய்வம் இருப்பதாகச் சொல்லப்படும் அந்தக் குலத் தெய்வம் எனத் திருமண அழைப்பிதழில் கூட நாம் காண்கிறோம். நாம் அனைவரும் பங்காளிகள் என்றும் மறவேன் குலதெய்வத்தைக் கும்மியடி என்று குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகின்றது.

சில நேரங்களில் செல்வாக்குமிக்க குலதெய்வம், ஊர் தெய்வம் பின்னர்ப் பல ஊர் தெய்வமாகவும் மாறுவதும் உண்டு.இத்தெய்வங்களைப் பெரும்பாலும் தொடர்பு கொள்ளாத முழுமுதற்கடவுள் என்று சொல்லப்படுகின்ற பிற தெய்வங்களை வணங்காமல் இருக்கின்ற மக்கள் வழிபாடு செய்கின்றனர். இங்குப் பூஜை, திருவிழா போன்ற வரையறை கிடையாது. பிராமணரல்லாதோர் இங்குப் பூசாரியாக இருப்பார்கள். கோவில் போன்ற அமைப்பும் இங்குப் பெரும்பாலும் கடைபிடிப்பதில்லை. செவிவழிச் செய்திகளும் கர்ணப் பரம்பரைக் கதைகளும் இதற்கு உண்டு. அச்சத்தின் காரணமாகவும்நோய் முதலிய காரணங்களாலும் அந்த நோயைத் தடுக்க வேண்டும் என நாட்டுப்புறத் தெய்வங்களை மக்கள் வழிபடுகின்றனர்.

சிறு தெய்வங்களில் மாரியம்மன் அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரியம் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைத்தெய்வங்கள் என்றும் கூறுவர். நாட்டுப்புறங்களில் இத்தைய தெய்வங்கள் தான்

அதிகமாக உள்ளன. அவர்களுடைய வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்டன. தெய்வங்கள் நாட்டுப்புறக் கலை வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. தமிழகமெங்கும் மாரியம்மன் வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றது.'' ஆறுகடன்நின்றாலும் மாரிகடன் ஆகாது'' என்ற நம்பிக்கை மக்களிடம் இன்றும் நிலவிவருகிறது. மாரியை மாரியம்மன் காளியம்மன் என்று மக்கள் வேண்டுகின்றனர். மாரியம்மன் வழிபாடு போன்றே அய்யனார் வழிபாடு இன்று உள்ளதை நாம் காண்கின்றோம்.

அய்யனாரே சட்டத்தைக் காக்க வந்தவர் என்று கருதி வழிபடுகின்றனர். அய்யனாரைப் பாடுகின்ற பாடல்கள் இருக்கின்றன. அய்யனாரைக் காவல் காக்கும் தெய்வமாகக் கருதுகின்றனர். வேளாண்மை உடையப் பெண்தெய்வங்கள்தான் அதிகமாக உள்ளன. இத்தனை தெய்வங்கள் விருப்பங்களையும் நிறைவேற்ற வேண்டிய வேண்டுதல்களையும் தெய்வநிலைக்குட்பட்ட பூசாரி அருள் வந்து அவர் மூலமாக அறிந்து கொள்வார்கள். இத்தெய்வ வழிபாடு நாட்டுப்புற மக்கள் தான் பின்பற்றகின்றனர். தெய்வங்களை மக்களால் வழங்கப்படுகின்ற சிவன், திருமால், முருகன், பிள்ளையார் என மக்களிடம் செல்வாக்கு பெற்ற தெய்வங்களையும் வணங்குகின்றனர். இக்கருத்துகளைக் கடவுளோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

ஆகமவிதிப்படி கோயிலும் திட்டவட்டமான பூஜை திருவிழாக்கள் இங்கு உண்டு. வழிபாட்டு முறையில் பிராமணியம் முறை பின்பற்றப் பெறுவதோடு திருவிழாக்களும் குறித்த காலத்தில் நடைபெறுகின்றன. இருப்பினும் நாட்டுப்புற மக்கள் வழிபாடு செய்யும் தெய்வத்திற்குத் தரும் முக்கியத்துவத்தைப் பிற தெய்வங்களுக்கு வழங்குவது இல்லை. ஆதிகாலத்தில் இயற்கையை வழிபடத் தொடங்கிய மனிதன் தன் முன்னோரையும் தன்னுள் இருந்து தோன்றிய மக்களையும் வணங்குவதாக இத்தெய்வ வழிபாடு தோன்றி இருக்கின்றன. இது குறித்தான கருத்தாடல்களும் கதையாடல்களும் நிறையவே உள்ளன. மக்களிடையே வாழ்ந்து அரசியலைப் புரிந்து திடீரென இறந்தவர்களும் பெருவாழ்வு வாழ்ந்தவர் என அனைவரும் நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆக மாறினார்.

நாட்டுப்புறத் தெய்வங்களை ஊர் தெய்வங்கள், சமாதி தெய்வங்கள், காவல் தெய்வங்கள் என்று மக்களை வகுத்துக்கொண்டனர். நாட்டுப்புற மக்கள் இயற்கையை வணங்கினர் வணங்குகின்றனர். ஞாயிறு, சந்திரன், மழை, பறவைகள், விலங்குகள் ஆகிவற்றை வணங்கின்றனர். நாட்டுப்புற வழிபாட்டில் சிறப்பிடம் பெறுவது முன்னோர் வழிபாடு நடுகல் வழிபாடு ஆகும்.

**பிறப்புச்சடங்கு**

குடும்ப வாழ்க்கையின் பயன்களில் ஒன்றாகவும் குடும்பத்தில் பெற்றோர்களின் எதிர்கால நம்பிக்கையாகவும் விளங்குகின்ற பிள்ளைப்பேறு ஆகும்.இதனை மக்கள் விரும்புகின்றனர். கொடுக்காமல் காலம் நீடிக்கும் சூழலில் அதற்காகப் பல சடங்குகளை இப்பகுதி மக்கள் செய்கின்றனர். குழந்தை பெறுவதற்தாக மண்சோறு சாப்பிடுதல், பறவைகளையும் விலங்குகளையும் கவனித்தல், பட்டு ஆடைகள் தானம் கொடுத்தும் மற்றவருக்கு உணவிடும் சடங்குகளைச் செய்து தெய்வங்களை வழிபடுகின்றனர். பிறந்த பிறகு

குழந்தைகளுக்கு முடி இறக்குதல், காது குத்துதல் என இதே நிலையிலேயே அனைத்தும் நடைபெறுகின்றன.

**இறப்புச் சடங்கு**

மனிதன் நம்மை விட்டுப் பிரிந்து சென்ற பிறகு அவற்றிற்குச் சில சடங்குளை செய்து வழியனுப்புகின்றனர். இதனை இறப்புச் சடங்கு என்று கூறுவர். நிறை செம்பு நீர் வெற்றிலை பாக்கு, வைத்துத் தூபதீபம் காட்டி, தேங்காய் உடைத்து வழிபடுவர். சாம்பிராணி சூடம் பத்தி எரியும் வெளிச்சம் இறந்தவர மேலுலகத்துக்கு அழைத்துச் செல்லும் என்றும் தீய ஆவிகளை விரட்டும் என்று நம்பினர். இறந்தவரின்அர்த்தங்கள் தெரியாமலேயே பல அறிவியல் முறைகளைக் கடைபிடித்து வருகின்றனர். ஒப்பாரி பாடல் இறந்தவர்களின் ஆவிகள் சாந்தியடைவதற்காக ஒப்பாரி பாடல் வரிகள் தாங்கிக்கொள்ளும் என்ற அடிப்பபடியில் நம்புகின்றேன்.

இறந்தவரின் உடல் பொது இடத்திற்குச் செல்லும் முன் அந்த வகைய்ல் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு, ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு மருந்துகளை வாங்கிக் கொள்வார். வீட்டிலுள்ள செல்வங்கள் இறந்தபின் சென்று விடாமல் இருக்கவே இத்தகைய முறையைப் பின்பற்றினர். இடுகாட்டில் நடைபெறும் சடங்குகளில் தலைமுடியை மழித்தல் போல மிகுதியாய் இருக்கும் முடி இறக்குதல் வழக்கம் என்று சொல்லப்படுகின்றது. இறந்தவர் நீர் அருந்தி வர வேண்டும் என்ற எண்ணத்துடன் நீர்க்குடத்தை நாட்டுப்புற மக்கள் உடைக்கின்றார். இதனால் நெருப்பின் ஒளியில் உயிர்களும் தடுமாறாது பரலோகம் செல்ல ஒளி மிகுந்து வழிநடத்தும் என்ற நம்பிக்கையில் இச்சடங்குகளைச் செய்கின்றார். உடல் நீரை உறிஞ்சி எலும்புகள் விரைவில் உணரும். உப்பு போட்டு மூடினால் வாடை வெளியில் வராது என்றும் சொல்வர். நாட்டுப்புற மக்கள் நம்பிக்கை அடிப்படையில் சில செயல் செய்தாலும் அவற்றில் அறிவியல் தன்மைகள் அறிவியல் கருத்துகள் நிறைந்திருக்கின்றன.

**தெய்வம் உருவங்கள்**

தெய்வங்கள் தெய்வங்களுக்கு இருப்பிடங்களாகக் கோயில் கட்டி வழிபடுகின்றனர். மக்கள் தொடக்கத்தில் தெய்வச் சிலையை வைத்து வழிபாடு செய்யவில்லை. கல், பாறை, மரம், வேர் ஆகியவற்றைத் தெய்வமாக வழிபட்டனர். ஒன்றுபட்ட தெய்வ வழிபாட்டிற்கு உருவச்சிலை அவசியமானது என்று கருதினர். எனவே மனிதனைப் போலவே உருவம் கொடுத்தனர். உருவமற்ற ஒன்றை நினைத்து இயலாது எனவே தெய்வத்திற்கு 300 உருவம் கொடுத்தனர் என்று கூறியுள்ளனர் மக்கள் வழிபடும் போது எமது உணர்வுகள் வெளிவருகின்றன. தங்களைக் காப்பாற்றிக் காப்பாற்றுவார் என்று நம்புகின்றனர். நம்பிக்கை நம்பிக்கை என்பது மக்களால் உருவாக்கப்பட்டுச் சமுதாயம் அவற்றைப் பின்பற்றுகின்றன.

தனிமனித உணர்வும் சமுதாய உணர்வும் ஒன்றுபடும் போது நம்பிக்கை வளர்கின்றன. மக்கள் வாழ்வு நம்பிக்கையுடன் செல்கிறது என்பது நாம் மறுக்க இயலாத உண்மையாகும். நம்பிக்கை என்ற உணவு மூலம் மக்கள் வாழ்வு வளம் பெற்றால் அது நன்மையே. ஆனால் அந்த நம்பிக்கையே மக்கள் வாழ்க்கையைத் தூரத் தள்ளி விடும் என்றால் அதை நம்பிக்கை தேவையா''? என்ற கருத்தும் நம் மனதில் தோன்றுகிறது. ஏனெனில் மூடநம்பிக்கை அன்று

முதல் இன்று வரை மக்களை ஆட்டிப் படைத்து வருகின்றது. கோயில் வழிபாட்டிற்கு வைக்கப்பட்ட தேங்காய் அழுகியிருந்தால் குடும்பத்திற்குத் தீமை வந்து சேரும் என்றும் கருதுகின்றனர்

அதேபோல விழாவிற்கு நாள் குறித்துப் பிறகு வெளியூருக்குச் செல்லக் கூடாது என்றும் கருதுகின்றனர். நிமித்தம் பார்த்தல் கனவில் நம்பிக்கை போன்று அன்று முதல் இன்று வரை இந்த நம்பிக்கையானது தொடர்ந்து வருகின்றது, நம்பிக்கையின் அடிப்படையில் குழந்தை மாலை சுற்றிப் பார்த்தல் ஆகாது என்றும் மாலை சுற்றிப் பெண் பிறந்தால் மாமனுக்கு ஆகாது என் பெருங்குற்றம் தரணியோர் சொல்வார்கள் குறித்து என்பார் என்ற வரி மதுரைவீரன் அம்மானையில் வந்துள்ளது மேலும் முத்துப்பட்டன் கதை போன்ற கதைகளும் இச்செய்தியானது சொல்லப்பட்டுள்ளது.

பிறப்பு பற்றிய நாட்டுப்புற மக்களின் பாடல்கள் சில

காணிக்கை கொண்டு
என்னம்மா உன்னைப் பெற்றார்
கடைத்தெருவே போகையில
மாணிக்கமின்னு என்று சொல்லி - தேவி சக்கம்மா
பிள்ளையில்லை இன்னுசொல்லி - என் கண்ணே
பிள்ளை வரம் தந்தாரே
மைந்தனில்லை இன்னுசொல்லி - கண்ணே உன்னை
மடிப்பிச்சை
நானூறு நாளாக
நாகருக்குப் பால்வார்த்து
நாகப் பிரதிஷ்டைசெய்து
நாள்தோறும் பூசை செய்து

என்ற பாடலடிகள் குழந்தை பிறப்பதற்காக மக்கள் செய்த செய்கின்ற நம்பிக்கையைக் காட்டுகின்றன.

மக்களின் வாழ்வியலோடு கலந்த சடங்கு மற்றும் தெய்வ வழிபாடு குறித்து அறிந்துகொள்ள இக்கட்டுரை ஒரளவு உதவிச் செய்யும். நாட்டுப்புற மக்கள் எதையுமே எளிதில் பின்பற்றும் பண்பினை உடையவர்கள். கைகளைக் காட்டிலும் நம்பிக்கை வலிமையானது என்றும் நம்புவது அவர்களது வழக்கம். அத்தகைய நம்பிக்கையைச் சொல்வதும் அறிந்துகொள்வதும் தேவையானதே.